**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 188 / 2016** |
| **Deposition of witness for** | : | **PW : 21** |
| **Name** | : | **Dr**. மணிகண்டன் |
| **Father's / Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **05.08.2022**

**முதல் விசாரணை :**

நான் தற்போது மதுரை அரசு மருத்துவக்கல்லூரியில் சட்டம் சார்ந்த மருத்துவத்துறையில் உதவி பேராசிரியராக பணியாற்றி வருகிறேன். கடந்த 01.08.2015 ம் தேதியன்று நான் பணியில் இருந்த போது, SS காலனி காவல்நிலைய காவல் ஆய்வாளர் என்னிடம் ஒரு வேண்டுகோள் கடிதத்தை கொடுத்தார். அதில் அக்காவல் நிலைய குற்ற எண்.700/2015 வழக்கு சம்பந்தப்பட்ட சுமார் 31 வயது மதிக்கத்தக்க கௌரி என்ற பெண் பிரேதத்தினை பிரேத பரிசோதனை செய்து அறிக்கை அளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருந்தது. அதன் படி அக்காவல்நிலைய முதல் நிலை காவலர் 1623 திரு.செந்தில்குமார் என்பவர் அடையாளம் காட்ட பிரேத பரிசோதனை அன்றைய தினம் காலை 11.15 மணிக்கு தொடங்கியது. பிரேதத்தின் விறைப்புத்தன்மை உடல் முழுவதும் காணப்பட்டது. பிரேதத்தின் கை மற்றும் கால் நகங்கள் வெளிறி காணப்பட்டது. பிரேதத்தின் மீது காயங்கள் இரத்தப்படிவங்கள் அதன் மேல் பகுதியில் காணப்பட்டது. பிரேதத்தின் மீது பின் புறம் இறப்புக்கு முன் ஏற்பட்ட காயங்கள் :

1) 0.5 செமீ விட்டம் உள்ள ஒரு கன்றிய காயம் நேர்கோடான நக கீரலுடன் வலதுபக்க கன்னத்தில் காணப்பட்டது.

2) பல்வேறு கன்றிய காயங்கள் 0.25 செமீ விட்டத்தில் இருந்து 0.5 செமீ விட்டம் வரை இடதுபக்க கன்னத்தில் காணப்பட்டது.

3) 2 x 0.5 செமீ அளவுள்ள ஒரு கன்றிய காயம் மேல் உதட்டின் இடது பக்கத்தில் உட்பகுதியில் காணப்பட்டது.

4) 2 x 0.5 செமீ அளவுள்ள ஒரு கன்றிய காயம் கீழ் உதட்டின் இடதுபக்கத்தில் உட்பகுதியில் காணப்பட்டது.

5) இரண்டு நேர்கோடான சிறாய்ப்பு காயங்கள் 0.25 செமீ x 2 மில்லி மீட்டர் நீளம் வரை நீண்டு 0.5 செமீ இடைவெளியில் கீழ் தாடையில் இடது பக்கத்தில் காணப்பட்டது.

6) 1 x 0.5 செமீ அளவுள்ள ஒரு சிறாய்ப்பு காயம் கீழ் தாடையின் இடது பக்கத்தில் 2 செமீக்கு கீழே காணப்பட்டது.

7) இரண்டு சிறாய்ப்பு காயங்கள் 0.5 செமீ விட்டத்தில் இடது உள்ளங்காலின் மேல் பகுதியில் காணப்பட்டது.

8) 1 x 0.5 செமீ அளவுள்ள ஒரு சிறாய்ப்பு காயம் இடது கால் முட்டிக்கு சற்று கீழே காணப்பட்டது.

9) 3 x 1 எழும்பு ஆழம்வரையுள்ள ஒரு குத்துக்காயம் கழுத்தின் இடது பக்கத்தில் மேலே கூறப்பட்டுள்ள 6 வது காயத்திற்கு 1 செமீக்கு கீழே காணப்பட்டது. அக்காயத்தின் விளிம்புகள் கூர்மையாகவும் முனைகள் கூர்மையாகவும் காணப்பட்டது. அக்காயத்திற்கு அடியில் இருக்கும் தசைகள் மற்றும் இரத்தக் குழாய்கள் வெட்டப்பட்டு இருந்தன.

வயிற்று அறை மற்றும் மார்புக்கூடு அறை காலியாக இருந்தது. இதயத்தை சுற்றியுள்ள சவ்விற்கு உள்ளே 15 மில்லி அளவில் வைக்கோல் நிற திரவம் காணப்பட்டது. இதயத்தின் இரு அறைகளும் காலியகவும் இதய தமணிகள் சீராகவும் இருந்தன. நுரையீரல் அதன் வெட்டுத்தோற்றத்தில் வெளிறி காணப்பட்டது. சுவாசக்குழாய் மற்றும் நாவடி எழும்பு சீராக இருந்தது.

உணவுப்பையில் 100 மில்லி அளவிற்கு பழுப்பு நிற திரவம் எவ்வித நெடி இல்லாமலும் காணப்பட்டது. கல்லீரல், மண்ணீரல் மற்றும் சிறுநீரகங்கள் அதன் வெட்டுத்தோற்றத்தில் வெளிறி காணப்பட்டது. சிறுகுடலில் 20 மில்லி அளவிற்கு பித்த நீர் எவ்வித நெடி இல்லாமல் காணப்பட்டது. சிறுநீர் பை காலியாக இருந்தது. கர்ப்பப்பை காலியாகவும் சீராகவும் இருந்தது. மூளை அதன் வெட்டுத் தோற்றத்தில் வெளிறி காணப்பட்டது.

கருத்துரை: இரசாயன பகுப்பாய்வு அறிக்கைக்காகவும், இரத்த மாதிரி மற்றும் பிறப்புறுப்பு பகுதியில் உள்ள பஞ்சு உருண்டை திரவத்தின் அறிக்கைக்காகவும் காத்திருப்பில் வைக்கப்பட்டது. இரசாயன பகுப்பாய்வு அறிக்கை 11.09.2015 ம் தேதியன்று கிடைக்கப்பெற்று அதன்படி இறந்த நபர் அவருக்கு ஏற்பட்ட 9 வது காயத்தினால் ஏற்பட்ட அதிர்ச்சி மற்றும் இரத்த போக்கினாலும் பிரேத பரிசோதனைக்கு 24 மணி நேரத்திற்கு முன்பாக இறந்திருக்கலாம் என்று சான்று வழங்கினேன். நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை **அதசாஆ. 25 ஆகும். இரசாயண பகுப்பாய்வு அறிக்கை (VISCERA) அதசாஆ.26 ஆகும். இறுதி கருத்துரை (final opinion) அதசாஆ.27 ஆகும்.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சட்டப்படி செய்யக்கூடாத வியத்தை செய்வதும், செய்யக்கூடிய விஷயத்தை செய்யாமல் இருப்பதும் குற்றம் என்று எனக்குத் தெரியும். இந்த வழக்கில் இறந்த கௌரியின் இரத்த வகை என்ன என்று தெரிந்து கொள்ளவில்லை. பெண்ணின் உடலை பொறுத்த வரை மண்டையில் ஏதேனும் காயங்கள் உள்ளனவா என்பதை சோதிப்பதற்கு தலை முடிகளை முழுவதுவாக எடுத்துவிட வேண்டும் என்றால் அவசியம் இல்லை. இறந்த பெண்ணின் முடி பாதுகாக்கப்பட்டிருந்ததா என்றால் இல்லை. உடலில் காயங்கள் எதுவும் காணப்பட்டால் பிரேத பரிசோதனை அறிக்கையில்

அவற்றை குறிப்பிடுவதற்கு முன்பு அந்த காயங்களை புகைப்படம் எடுக்க வேண்டும் என்றால் அதற்கு அவசியம் இல்லை. medical jurisprudence படி அவசியம் என்றால் சரியல்ல. கொலை வழக்குகளில் வீடியோ பதிவு செய்ய வேண்டும் என்று மாண்புமிகு உயர்நீதிமன்றம் உத்தரவிடப்பட்டிருக்கிறது என்றால் காவல் ஆய்வாளர் வேண்டுகோள் கடிதம் கொடுத்திருந்தால் வீடியோ பதிவு செய்திருப்போம். இந்த வழக்கில் காவல் ஆய்வாளர் வீடியோ பதிவு செய்ய வேண்டுகோள் கடிதம் எதுவும் கொடுக்கவில்லை. பிரேத பரிசோதனைக்கு முன்பு போலிசார் கொடுத்திருந்த காயங்களோடு நான் பிரேதத்தில் இருந்த காயங்களை ஒப்பீடு செய்து பார்த்தேன். அவ்வாறு ஒப்பீடு செய்து பார்த்த விவரங்களை போலிசார் என்னை விசாரணை செய்த போது நான் சொல்லியுள்ளேன். கொலை வழக்குகளில் ஒரு பிரேதத்தினை மருத்துவமனைக்கு கொண்டுவரும் போது விபத்து பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டியது அவசியம். இந்த வழக்கில் இறந்ததாக சொல்லப்படும் கௌரியின் விபத்து பதிவேடு எண். 5260117 ஆகும். அந்த விபத்து பதிவேட்டில் அட்மிட் செய்த மருத்துவர் பெயர் டாக்டர்.சுமதி. எனது பிரேத பரிசோதனை அறிக்கையில் அந்த விபத்து பதிவேட்டின் எண்ணை நான் குறிப்பிடவில்லை என்றால் அதற்கு அவசியம் இல்லை. எனக்கு வழக்கு சரித்திரம் கொடுக்கப்பட்டது. வழக்கு சரித்திரத்தின் படி சந்தேக மரணம் என்று தெரிந்து கொண்டேன். வழக்கின் சரித்திரம் எனக்கு பிரேத பரிசோதனை செய்ய வேண்டுகோள் கடிதம் கொடுத்த போது கொடுத்தார்கள். காலை 11.00 மணிக்கு கொடுத்தார்கள். விபத்து பதிவேட்டில் பிரேத்தினை யார் கொடுண்டுவந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் என்னிடம் இருப்பது ஒளிநகல் என்பதால் தெளிவாக இல்லை. போலிசார் கேட்டுக்கொண்டதன் பேரில் ஒளிநகல் தெளிவாக இல்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பிரேத பரிசேதனை அறிக்கையில் குறிப்பிட்டுள்ள 9 காயங்களும் என்னிடம் உள்ள விபத்து

பதிவேட்டு ஒளிநகலில் குறிப்பிடவில்லை. நான் பிரேத பரிசோதனை செய்த போது, இறந்த நபர் ஏதேனும் வன்புணர்ச்சி செய்யப்பட்டிருந்தாரா என்று அறிய அவரது பிறப்புறுப்பில் இருந்து திரவம் எடுக்கப்பட்டிருந்தது. மேற்படி திரவம் ஆய்விற்காக அனுப்பப்பட்டு இருந்தது. அந்த ஆய்வறிக்கையின் முடிவு என்ன என்று நான் தெரிந்துகொள்ளவில்லை. ஒரு பெண் இறந்தவுடன் அவரது உடலில் இரத்தம் பொதுவாக சிவப்பு நிறத்தில் தான் இருக்கும். இறப்பிற்கு சில மணி நேரங்களுக்கு பிறகு இரத்தம் சற்று வெளிறி காணப்படும். பழுப்பு., சிவப்பு என்று சொல்ல இயலாது. கடைசியாக கருப்பு நிறமாக மாறிவிடும். அது எவ்வளவு நேரத்தில் மாறும் என்று குறிப்பிட்டு சொல்ல முடியாது. நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கையில் இறப்பானது பிரேத பரிசோதனைக்கு 24 மணிநேரத்திற்கு முன்பு நடந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளேன். அவ்வாறு என்றால் முதல் நாள் காலை சுமார் 11.00 மணிக்குள்ளாக இறப்பு நடந்திருக்கவேண்டும். நான் பிரேத பரிசோதணை செய்த போது பிரேத்தின் இரத்ததின் நிறம் எவ்வாறு இருந்தது என்று குறிப்பிடவில்லை. உயிருடன் இருக்கும்போது உள்ள இரத்தத்திற்கும் இறப்பிற்கு பிறகு இருக்கும் இரத்தத்திற்கும் வேறுபாடு உண்டு. இறந்த நபரின் உடலில் மீது காணப்பட்ட இரத்த படிவங்கள் இறப்பிற்கு முன்பு ஏற்பட்டதா பின்பு ஏற்பட்டதா என்று குறிப்பிட்டு சொல்லவில்லை. ஏன் என்றால் அவ்வாறு குறிப்பிட இயலாது. குறிப்பிட்டு கூற இயலும் என்றால் சரியல்ல. உயிருடன் இருக்கும் போது வெளிப்பட்ட ரத்தத்தில் உரைபுரதம் (Fibrin)கூட்டுப்பொருள் இருப்பதால் உலர்ந்த பின் அதை துண்டு துண்டாக எடுக்கமுடியும் என்றால் சரிதான். அது இரத்தம் உறையும் தன்மையைத்தான் குறிக்கும். உலர்ந்த பின் எடுக்கும் இரத்தம் பொடி போல் காணப்படும் என்றால் சரியல்ல. உலர்ந்து காணப்படும். உலர்ந்து என்றால் Dry ஆக இருக்கும். கையால் தொட்டால் ஒட்டாது. இது போன்ற உலர்ந்த இரத்த படிவங்கள் பற்றி கௌரி பிரேதத்தில் இருந்ததாக நான் எனது பிரேத

பரிசோதனை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன். வன்புணர்ச்சிக்கு பிறகு 3 முதல் 7 நாட்கள் வரை ஆணின் விந்து உயிர்ப்புடன் இருக்கும் என்றால் பொதுவாக இருக்கும். நான் பிரேத பரிசோதனை செய்த போது அவ்வாறு விந்தணுக்கள் காணப்படவில்லை. பிறப்புறுப்பு பகுதியில் இருந்த திரவத்தைை ஆய்விற்காக அனுப்பியிருந்தேன். விந்துகரையை எளிதாக யாருடையது என்று கண்டுபிடிக்க முடியும். ஆனால் விந்து இருக்கும் இடத்தை பொறுத்தது ஆகும். பொதுவாக ஒரு பெண் உடலில் காணப்படும் விந்து யாருடையது என்று வகைப்படுத்த முடியும். அதே போல் உமிழ்நீரையும் (saliva) வகைப்படுத்த முடியும். அந்த உமிழ்நீரை வைத்து குற்றவாளி யார் என்று கண்டுபிடிக்க முடியும். உமிழ்நீர் மூலம் DNA பரிசோதனை செய்யமுடியும். அது போக வியர்வை மூலம் வரும் என்சைம்ஸ் வைத்து குற்றவாளி யார் என்று சொல்ல முடியுமா என்றால் என்சைம்ஸ்களை வைத்து சொல்ல முடியாது. ஆனால் வியர்வையில் உள்ள செல்களை வைத்து சொல்ல முடியும். நான் பிரேத பரிசோதனை செய்த போது, பிரேதத்தில் வேறு நபரின் முடி எதுவும் காணப்படவில்லை. பிரேதத்தின் கண்ணத்தில் இருந்த தோல்கள் யார் காயம் ஏற்படுத்தினாரோ அவர் நக கண்களில் இருக்க வாய்ப்புண்டு. நகக் கீரல்கள் இருந்ததாக சொல்லியுள்ளதில், நகம் இருந்ததா என்றால் இல்லை. நகக்கீரல்களை வைத்தே தற்போது குற்றவாளி யார் என்று கண்டுபிடிக்க முடியும் என்றால் முடியாது. பொதுவாக ஒரு நபர் ஒரு குழந்தையையோ ஒரு பெண்ணையோ love bite செய்யும்போது அந்த உமிழ்நீரை வைத்து குற்றவாளி யார் என்று கண்டுபிடிக்க முடியும். பிரேதத்தின் காணப்பட்ட Dried blood stains இறப்புக்கு முன்பு ஏற்பட்டதா பின்பு ஏற்பட்டதா என்று எனது அறிக்கையில் நான் சொல்லவில்லை. அவ்வாறு சொல்லஇயலாது. பிரேதத்தில் இருந்து எடுக்கும் இரத்தத்தை வைத்து அது எந்த வகையானது (Blood group) என்று கண்டுபிடிக்க முடியும். அந்த இரத்தத்தில் வேர்வையோ, வேறு பொருட்களோ கலந்து

இருந்தால் கண்டுபிடிப்பது கடினம். நான் இரசாயன பரிசோதனைக்கு அனுப்பும் போது DNA பரிசோதனை செய்ய வேண்டுகோள் கடிதம் கொடுக்கவில்லை. தற்போதுள்ள நிலவரப்படி DNA பரிசோதனையை வைத்து குற்றவாளி யார் என்று கண்டுபிடிக்க இயலும். போலிசார் என்னை எங்கு வைத்து எந்த தேதியில் விசாரணை செய்தார்கள் என்றால் மருத்துவக்கல்லூயில் வைத்து விசாரணை செய்தார்கள். தேதி ஞாபகம் இல்லை. பிரேத பரிசோதனை முடித்த பிறகு பொதுவாக இறப்பிற்கான காரணம் சொல்லப்படவில்லை. ஆனால் இறுதி அறிக்கையில் இறப்பின் காரணம் சொல்லியுள்ளேன். போலிசார் கேட்டுக்கொண்டதன் பேரில் பிரேத பரிசோதனை செய்த பிறகு இறப்பின் காரணத்தினை சொல்லாமல் இறுதி அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. பிரேதத்தில் இரத்தம் வெளிப்பட்ட பிறகு அந்த இரத்தத்தை வைத்து ஒரு குற்றம் ஏப்போது ஏற்பட்டது என்று யூகிக்க முடியும் என்றால் சரியாக சொல்லமுடியாது. அதே போல் இரத்ததின் நிற மாற்றங்களை வைத்து குற்றம் நடந்த நேரத்தை தோராயமாக சொல்ல முடியும். பிரேதத்தின் உதடுகளில் இருந்த காயங்கள் love bite ஆக இருக்க வாய்ப்புண்டு. அந்த காயங்கள் அந்த பெண் உயிருடன் இருக்கும் போது ஏற்பட்ட காயங்கள்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
மதுரை

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | **:** | **SC NO. 188 / 2016** |
| **Deposition of witness for** | **:** | **PW : 20** |
| **Name** | **:** | **திரு. விஜயேந்திரன்** |
| **Father's / Husband's Name** | **:** | |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **05.08.2022**

**முதல் விசாரணை :**

நான் தற்போது மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் உதவி இயக்குநராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 06.08.2015 அன்று கூடுதல் மகளிர் நீதிமன்றம், மதுரை அவர்களிடம் இருந்து, SS காலனி காவல் நிலைய குற்ற எண். 700/2015 சம்பந்தப்பட்ட வழக்கு சொத்தானது, நீதிமன்ற வேண்டுகோள் கடிதத்துடன் முத்திரையிடப்பட்ட ஒரு அட்டை பெட்டி மற்றும் இரண்டு காகித உறைகளில் வைத்து முதல் நிலை காவலர் 1623 திரு.செந்தில்குமார் அவர்கள் மூலம் எங்கள் ஆய்வகத்தில் பகுப்பாய்விற்காக பெறப்பட்டது. அதில் PM No. 1888/2015 நாள் 01.08.2015 கௌரி, 31/F, swab என்று குறிப்பிடப்பட்டிருந்த அட்டைப்பெட்டியில் இருந்த வழக்கு சொத்து :

வரிசை எண்.1) 4 test tube களில் சேகாரம் செய்யப்பட்டு, cotton swab PM No. 1888/2015 நாள் 01.08.2015 கௌரி, 31/F, swabs என்று குறிப்பிடப்பட்டிருந்த முதல் காகித உறையில் இருந்த வழக்கு சொத்து,

வரிசை எண்.2) இரண்டு கண்ணாடு சிலேடுகளில் தடவப்பட்டிருந்த பழுப்பு நிற உலர்ந்த திரவம் SO No. 1888/2015 நாள் 01.08.2015 கௌரி இரத்த மாதிரி என்று குறிப்பிட்டிருந்த இரண்டாவதாக இருந்த காகித உறையில் இருந்த வழக்கு சொத்து

வரிசை எண்.3) காடா துணியில் சேகரம் செய்யப்பட்ட மாதிரி இரத்தம்.

இவற்றை பகுப்பாய்வு செய்து,

வரிசை எண்.1 ல் விந்து ஏதும் இல்லை.

வரிசை எண்.2 ல் விந்தணுக்கள் ஏதும் இல்லை

என்ற உயிரியல் அறிக்கை வழங்கினேன்.

12.08.2015 தேதியிட்ட அந்த **உயிரியில் அறிக்கை அதசாஆ. 20 ஆகும்.**

மேலும் வரிசை எண்.3 மாதிரி இரத்தத்தை பகுப்பாய்வு செய்ததில் அது B வகை இரத்த பிரிவை சார்ந்தது என்ற குருதிவடிநீரியல் அறிக்கை வழங்கினேன். MDU/SER/**MD**.235/15 **நாள்** 22.09.2015 **தேதியிட்ட அந்த குருதிவடிநீரியில் அறிக்கை அதசாஆ.**21 **ஆகும்.**

கடந்த 10.08.2015 அன்று நீதித்துறை நடுவர், கூடுதல் மகளிர் நீதிமன்றம், மதுரை அவர்களிடம் இருந்து SS காலனி காவல் நிலைய குற்ற எண். 700/2015 வழக்கில் சம்பந்தப்பட்ட வழக்கு சொத்தானது வேண்டுகோள் கடிதத்துடன் நீதிமன்ற முத்திரையுடன் கூடிய ஒரு காகித உறையில் வைத்து முதல் நிலை காவலர் 899 திரு.முத்துக்குமார் அவர்கள் மூலம் எங்கள் ஆய்வகத்தில் பகுப்பாய்விற்காக பெறப்பட்டது. காகிதஉறையில் இருந்த வழக்கு சொத்தின்

வரிசை எண்.1) SO No. 72(A) நாள் 06.08.2015, விஸ்வநாதன் 28/M seman என்று குறிப்பிடப்பட்டிருந்த வடிதாளில் சேகரம் செய்யப்பட்டிருந்த மாதிரி விந்து.

வரிசை எண்.2) So No. 72(B) நாள் 06.08.2015 முத்துக்குமார் 24/M விந்து என்று குறிப்பிடப்பட்டிருந்த வடிதாளில் சேகரம் செய்யப்பட்டிருந்த மாதிரி விந்து.

இவற்றை பகுப்பாய்வு மேற்கொண்டதில், வரிசை எண்.1 மற்றும் 2ல் இரத்த வகையை அறுதியிட்டு கூறஇயலவில்லை என்ற குருதிவடிநீரியல் அறிக்கை வழங்கினேன். **அந்த குருதிவடிநீரியில் அறிக்கை MDU /SER/MD.241/15 நாள் 22.09.2015 அதசாஆ. 22 ஆகும்.**

மேலும் கடந்த 18.08.2015 அன்று நீதித்துறை நடுவர், கூடுதல் மகளிர் நீதிமன்றம், மதுரை அவர்களிடம் இருந்து SS காலனி காவல்நிலைய குற்ற எண். 700/2015 சம்பந்தப்பட்ட வழக்கு சொத்துக்கள் நீதிமன்ற கடிதம் மற்றும் முத்திரையுடன் கூடிய ஒரு மரப்பெட்டியில் வைத்து தலைமை காவலர் 1025 திரு.மகாலிங்கம் அவர்கள் மூலம் எங்கள் ஆய்வகத்தில் பகுப்பாய்விற்காக பெறப்பட்டது. மரப்பெட்டியில் இருந்த வழக்கு சொத்துக்கள்

வரிசை எண்.1) பழுப்புநிற மார்பிள் கல்லின் பகுதி

வரிசை எண்.2) மெரூன் மற்றும் வெள்ளை நிறம் கலந்த cloth piece.

வரிசை எண்.3) pinkish நிற gray கலர் பாடர் போட்ட தலையணை ஒன்று

வரிசை எண்.4) சிவப்பு, நீலம், பச்சை, வயலட் மற்றும் வெள்ளை நிற கோடுகளுடன் கூடிய படுக்கை விரிப்பு (Bed spread)

வரிசை எண்.5) நீலம் மற்றும் வெள்ளை நிற கட்டம் போட்ட gray மற்றும் பிரவுன் கலர் லுங்கி.

வரிசை எண்.6) மஞ்சள் நிற கட்டம் போட்ட நீலம் மற்றும் பச்சை நிற பூ டிசைனும், நீலம் மற்றும் வயலட் நிற பாடர் போட்ட பச்சை நிற சேலை

வரிசை எண்.7) மஞ்சள் நிற கட்டம் போட்ட நீலம் மற்றும் வயலட் பாடர் டிசைனுடன் கூடிய கிழிந்த நிலையில் உள்ள பச்சை நிற பிளௌஸ்

வரிசை எண்.8) வெள்ளை நிற பிரா

வரிசை எண்.9) பச்சை நிற பாவாடை

வரிசை எண்.10) கருப்பு, பச்சை மற்றும் வெள்ளை நிற கட்டம் போட்ட கிழிந்த நிலையில் ஜட்டி.

வரிசை எண்.11) pink நிற முழுக்கை சட்டை, கருப்பு நிற கோடுகளுடன்.

வரிசை எண்.12) நீலநிற ஜீன்ஸ் பேண்ட் கிழிந்த நிலையில்

வரிசை எண்.13) வெள்ளை நிற மண்டை ஓட்டின் படம் டிசைன் போட்ட கருப்பு நிற கைக்குட்டை

வரிசை எண்.14) வெள்ளை நிற கையில்லாத முண்டா பனியன் கிழிந்த நிலையில்

வரிசை எண்.15) ஒரு ஜோடி கிழிந்த நிலையில் உள்ள வெள்ளை நிற கையுறை

வரிசை எண்.16) பச்சை மற்றும் வெள்ளை நிற எம்ராய்டரி பூ டிசைன் போட்ட பச்சை மற்றும் கருப்பு நிற முழுக்கை சட்டை

வரிசை எண்.17) நீலநிற ஜீன்ஸ் பேண்ட்

வரிசை எண்.18) ஒரு ஜோடி வெள்ளைநிற கையுறை

வரிசை எண்.19) சுமார் 12 செமீ நீளமுள்ள பளபளப்புடன் கூடிய கத்தி, கைப்பிடி இல்லாதநிலையில்

வரிசை எண்.20) சுமார் 10.5 செமீ நீளமுள்ள பிரௌன் மற்றும் வெள்ளைநிற கைப்பிடி

மேற்கண்ட சொத்துக்களை பகுப்பாய்வு மேற்கொண்டதில், வரிசை எண். 1 முதல் 9 மற்றும் 11 முதல் 20 வரையிலான சொத்துக்களில் இரத்தம் கண்டறியப்பட்டது.

வரிசை எண்.10 ல் இரத்தம் இல்லை.

மற்றும் வரிசை எண்.1 முதல் 18 வரையிலான சொத்துக்களில் விந்து ஏதும் இல்லை. என்ற உயிரியில் அறிக்கை வழங்கினேன்.

**அந்த உயிரியில் அறிக்கை MDU/BIOL/320/15 நாள் 28.08.2015 தேதியிட்ட அறிக்கை அதசாஆ.23 ஆகும்.**

இரத்தம் பட்ட பொருட்களின் பகுதிப்பொருட்களை அவற்றின் இனம் மற்றும் வகை அறியும் பொருட்டு, குருதிவடிநீரியில் பிரிவில் பகுப்பாய்வு செய்ததில்

வரிசை எண். 1 முதல் 9, வரிசை எண் 11 முதல் வரிசை எண்.20 வரையிலான சொத்துக்களில் இருந்த இரத்தம் மனித இரத்தம் என்றும்,

வரிசை எண்.1,2,4 முதல் 9,11,13, 16 மற்றும் 19 ஆகிய வழக்கு சொத்துக்களில் இருந்த இரத்தம் B வகை இரத்த பிரிவை சார்ந்தது என்றும், வரிசை எண்.3, 12, 14, 15, 17, 18 மற்றும் 20 ஆகியவற்றில் இருந்த இரத்தத்தின் வகையை அறுதியிட்டு கூற இயலவில்லை என்று குருதிவடிநீரியில் அறிக்கை வழங்கினேன்.

**அந்த குருதிவடிநீரியில் அறிக்கை MDU/SER/MD**.246/15 **நாள்** 29.10.2015 **தேதியிட்ட அறிக்கை அதசாஆ**.24 **ஆகும்.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நான் தாக்கல் செய்த அதசாஆ.24 அறிக்கையில் 10 வது ஐட்டம் அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்றால் 10 வது ஐட்டத்தில் இரத்தம் கண்டறியப்படவில்லை. நான் தாக்கல் செய்த அதசாஆ.24 ல் conclusive என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் M.Sc (Zoology) படித்துள்ளேன். நாங்கள் தற்போது செய்யும் பகுப்பாய்வுகள் அனைத்தும் இயந்திரங்கள் மூலம் செய்யப்படும் என்றால் இயந்திரம் மற்றும் இரசாயனம் மூலம் பகுப்பாய்வு செய்வோம். skilled assistant மொத்தம் 2 பேர் சேர்ந்து தான் பகுப்பாய்வு செய்தோம். skilled assistant பெயர் திரு.மணி ஆகும். அவர் செய்த அறிக்கையை நான் தாக்கல் செய்யவில்லை. நான் வழங்கிய அறிக்கையில் நானும் எனது skilled assistant -உம் கையொப்பம் செய்துள்ளோம். இரத்த மாதிரிகளை பரிசோதனை செய்யும்போது ஒரு முறை தான் சோதனை செய்வோம். Skilled assistant செய்யும் அறிக்கையும் நான் செய்யும் பரிசோதனையின் அறிக்கையும் ஒன்றாக வரவேண்டும் என்றால் இரண்டு பகுப்பாய்வுகள் செய்யமாட்டோம். பொதுவாக ஒருவர் இறப்பிற்கு பிறகு அவரது இரத்தத்தின் வகையை கண்டுபிடிக்கமுடியும். முடியும் என்றால் Absorption elution technique முறையில் கண்டு பிடிக்க முடியும். இறப்பிற்கு பிறகு பூஞ்சைகள், நுண்ணுயிரிகள் இரத்தத்துடன் சேர

வாய்ப்புள்ளது. அவ்வாறு சேரும் போது இரத்த பிரிவின் மூலக்கூறுகள் பாதிக்கப்படும்போது அது என்ன பிரிவு இரத்தம் என்று அறுதியிட்டு சொல்ல இயலாது. பொதுவாக பிரேத பரிசோததனைக்கு பிரேதத்தை கொண்டு வரும்போது, பிரேதத்தின் மீது மூடப்பட்டிருந்த துணி இரத்தத்தில் பட்டிருந்தாலும் இரத்தத்தின் வகையை குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் அது பாதிப்படையும் நிலையைப் பொறுத்தது ஆகும். இரத்த மாதிரியை விட DNA பரிசோதனை தான் சிறப்பான ஆய்வு என்றால் சரிதான். இறந்து போன ஒரு நபரின் மீதுள்ள படிமங்களான இரத்தம், எச்சில், வியர்வை ஆகியவைகளைக் கொண்டு DNA பரிசோதனைகள் மூலம் அந்த நபரை கண்டு பிடிக்க முடியும். ஆனால் இந்த வழக்கில் DNA பரிசோதனை செய்வதற்கு வேண்டுகோள் கடிதம் கொடுக்கவில்லை. இறந்த நபரின் உறைந்த இரத்தத்தில் என்ன வகையான இரத்தம் positive. negative என்று கண்டுபிடிக்க முடியாது. இறந்த 24 மணி நேரத்திற்கு பிறகு இரத்தம் உறைந்துவிடும். அதிலிருந்து எடுக்கப்படும் உறைந்த இரதத்தில் இருந்து positive அல்லது negative என்று கண்டுபிடிக்கமுடியாது. பகுப்பாய்விற்கு அனுப்பப்பட்ட மாதிரி இரத்தக்கரை (stain) ஆகும். இறந்த பிறகு எடுக்கும் இரத்தத்தில் பல கூட்டுப்பொருட்கள் சேர்ந்து இருக்கும். ஆனால் அந்த கூட்டு பொருட்கள் எவைகள் என்று எனது அறிக்கையில் குறிப்பிடவில்லை. இரத்த வகைகளில் positive, negative, inconclusive என்று குறிப்பிடுவோம் என்றால் சரியல்ல. A, B, O என்று இரத்தத்தை வகைப்படுத்தலாம். நான் பரிசோதனை செய்த இரத்தத்தில் இரத்த வகை B என்று சொல்ல முடியாது என்றால் சரியல்ல. நான் கொடுத்த அறிக்கையில் B positive. B negative என்று குறிப்பிடவில்லை என்றால் உறைந்த இரத்தம் என்பதால் குறிப்பிடவில்லை. எனக்கு அனுப்பப்பட்ட இரத்தம் உறைந்த இரத்தம். எனக்கு எதிரிகளின் விந்தணு மட்டும் அனுப்பப்பட்டது. இரத்த மாதிரி அனுப்பபடவில்லை. ஒருவேளை எனக்கு எதிரிகளின் இரத்த மாதிரியும் அனுப்பியிருந்து விந்தணுக்களையும், இரத்தத்தையும் ஒப்பிட்டு ஆய்வு

செய்திருந்தால் எளிதாக எதிரி யார் என்று கண்டுபிடிக்க முடியும். அதுபோல எதிரிகளின் உமிழ்நீர், நகம், முடி, இரத்த மாதிரி ஆகியவைகள் ஆய்விற்கு அனுப்பப்படவில்லை. ஒருவர் உயிருடன் இருக்கும்போது இருக்கும் இரத்தத்திற்கும், இறந்த பிறகு உள்ள இரத்ததிற்கும் வேறுபாடு உள்ளது. பொதுவாக இரப்பர் glouse கைகளில் அணிந்திருந்தால் கை ரேகை பதியாது. பொதுவாக ஒரு கையில் இரப்பர் glouse யும், ஒரு கை glouse அணியாமலும் இருக்கும் போது, ஒரு குற்றம் நடந்திருக்கும்போது, யார் குற்றவாளி என்று சொல்லமுடியாது. பொதுவாக glouse எத்தனை வகை உள்ளது என்றால் பல வகைகள் உள்ளது. சிந்தடிக் என்பது துணியுறையைத் தவிர்த்து மற்ற அனைத்தும் செயற்கை உறை என்று குறிப்பிடுவது வழக்கம். இறந்த பெண்ணின் கணவர் வெங்கடேசனின் விந்தணுவோ, இரத்த மாதிரியோ, ஆய்விற்கு அனுப்பப்படவில்லை. மனித இரத்தம் என்பதற்கு கண்டுபிடிக்க Gel electro phoresis முறையாகும். Precipitin முறையும் சிறந்தது என்றால் சரிதான். நான் precipitin முறையை பயன்படுத்தியிருந்தால் சரியாக மனித இரத்தம் என்று கண்டுபிடிக்க முடியும் என்றால் அதன் மூலமும் கண்டுபிடிக்க முடியும். உலகில் பல்வேறு நாடுகளில் precipitin முறையைத்தான் கையாளுகிறார்கள் என்றால் சரியல்ல. நான் வழங்கியுள்ள அறிக்கையானது தோராயமானது என்றால் சரியல்ல. நான் இரத்தம் B வகை என்று தான் சொல்லியுள்ளேன். B Positive, அல்லது B negative என்று வகைகளை குறிப்பிடவில்லை. இரத்ததுடன் வேர்வை சேரும்போது, இரத்த வகையை கண்டுபிடிப்பது கடினம். இரத்த மூலக்கூறுகள் பாதிப்படையாமல் இருந்தால் கண்டுபிடிக்க முடியும். முழுவதும் கலந்திருந்தால் கண்டுபிடிக்க முடியாது. பொதுவாக நகை அணிந்திருக்கும்போது, அதில் உள்ள இரத்தக்கரை, வியர்வை மற்றும் கை ரேகை இருந்தால் கண்டுபிடிக்க முடியும். இந்த வழக்கில் நகைகள் எதுவும் பகுப்பாய்விற்கு அனுப்பப்படவில்லை. இரத்தக்கரைகளை வைத்து ஒரு குற்றம் எப்போது நிகழ்ந்தது என்று தோராயமாக சொல்லமுடியும். எனக்கு

வந்த இரத்தக்கரை வைத்து குற்றம் எப்போது நடந்தது என்று சொல்ல முடியாது. ஏன் என்றால் துணிகளில் படிந்த இரத்தக்கரைகளை வைத்து குற்றம் நிகழ்ந்த நேரம் பற்றி சொல்ல இயலாது. பகுப்பாய்விற்கு பெறப்பட்ட கத்தி கைப்பிடி உடைந்ததாக சொல்லப்பட்டுள்ளதில், கத்தி எவ்வாறு உடைந்திருந்தது என்று தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. கத்தியின் பிளேடு பகுதிக்கு கீழே உள்ள ராடில் இரத்தம் இருந்ததா என்றால் ராடு இருந்ததா என்று ஞாபகம் இல்லை. கத்தியின் உடைந்த பகுதியை வைத்து கத்தியின் கைப்பிடி சேருமா என்று நான் பார்க்கவில்லை. இரத்த வகை, இரத்தக் கரை ஆகியவைகளை வைத்து குற்றம் எப்போது நடந்தது என்று சரியாக சொல்ல முடியாது. ஒருவேளை இந்த வழககில் DNA பகுப்பாய்விற்கு கேட்கப்பட்டிருந்தால் யார் குற்றம் செய்தார் என்று குறிப்பிட்டு சொல்ல இயலும். அவ்வாறு கேட்கப்பட்டிருந்தால் அரசு வழக்கிற்கு சாதகமாக இருக்கும். ஆனால் ஆய்வாளர் DNA பரிசோதனைக்கு இந்த வழக்கில் கேட்கவில்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
மதுரை